1981 ஆகஸ்டு 26]

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாட்டில் அரசு நடத்தும் ஆலைகள் எத்தனை? எந்தெந்த ஆலைகளில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? அந்த நஷ்டத்தைச் சரிக்கட்ட அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 11 சர்க்கரை ஆலைகள்—9 கூட்டுறவுத் துறையிலும், 2 அரசு பொதுத் துறையிலும்—நடந்து வருகின்றன. மூலக் கேள்வி பெரம்பலூர் சர்க்கரை ஆலையிலே 30–9–1979 வரை ஏற்பட்ட நஷ்டம் பற்றியது. அந்த ஆலையைப் பற்றியே கூட இன்றைய வரை உள்ள நிலையைக் கேட்கவில்லை, 1979 வரைதான் கேட்டிருக்கிறார். மற்ற ஆலைகளில் ஏற்பட்டுள்ள நஷ்டம் பற்றித் தனியாகக் கேட்டால், அது பற்றிய விவரம் சேகரித்துத் தரப்படும்.

டி. ஆலங்குளம் அரிசன காலனிக்கான மேம்பாட்டுத் திட்டங்கள்.

*வினா எண் 79—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த டி. ஆலங்குளம் அரிசன காலனிக்கு ரோடு போட, பாலம் அமைக்க, தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) முன்னாள் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் டி. ஆலங்குளம் ஆதிதிராவிடர் குடியிருப்பை பார்வையிட்ட சமயம் அக்குடியிருப்பில் உள்ள ஆதிதிராவிடர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் பாலமும், தடுப்புச் சுவரும் கட்டவேண்டிய அவசியம் என்று தெரிந்ததால் அக்குடியிருப்பிற்கு அருகே ஓடும் கால்வாயின் குறுக்கே ஒரு பெரிய பாலமும் 100 மீட்டர் நீளமுள்ள மண்கூரை மற்றும் தடுப்புச் சுவரும் ரூ. 45,000 செலவில் கட்ட ஆதிதிராவிடர் நல இயக்குநர் கருத்துரு ஒன்று அரசுக்கு அனுப்பியுள்ளார்.

(ஆ) இக் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் டி. ஆலங்குளம் கிராமத்தில் ரூ. 45,000 மதிப்பீட்டில் வேலை செய்கின்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். 1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் பொழுது, 3 நாட்கள் அந்தக் கிராமம், வெளி உலகத்தோடு தொடர்பில்லாமலே, ஹெலிகாப்டர் மூலமாக அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் போடக் கூடிய நிலை இருந்தது. அதைக் கருதி இரண்டு

ஆண்டுகளுக்கு முன்பாகவே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தோம். அதை விரைவாகச் செயல்படுத்தி, இந்த ஆண்டிலேயே வேலையைத் தொடங்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையிலே, அதற்குரிய அவசியத்தை உணர்ந்து, அந்தத் திட்டத்தை நிதித் துறையும் ஒத்துக் கொண்டிருக்கிறது. மிக விரைவாக அரசு ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் ஆதி திராவிடர் நலத் துறை செய்து கொடுப்பதாக சொன்னார்கள். ஆனால், அது இராமநாதபுரம் மாவட்டம் திருபுவனம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தது. அரசாங்க ஆணைப்படி, இவை, ஊராட்சி ஒன்றியச் செலவிலேயே செய்ய வேண்டியிருக்கிறது. இந்த ஊராட்சி ஒன்றியம் ஏதாவது தொகை கொடுப்பதாக ஒத்துக் கொண்டிருக்கிறதா, அல்லது முழுத் தொகையையும் ஆதி திராவிடர் நலத் துறையே கொடுக்கப்போகிறதா என அறிய விரும்புகிறேன். அதோடுகூட தமிழகத்திலே பல ஊராட்சி ஒன்றியங்கள் இம்மாதிரி வேலைகளுக்குச் சட்டப்படி கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அது சம்பந்தமாக ஆதி திராவிடர் நலத்துறை என்ன உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தைப் பற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் ஆதி திராவிட நலத்துறை மூலமாகத்தான் அக்குடியிருப்பிற்கு அருகே ஓடும் கால்வாயின் குறுக்கே ஒரு பெரிய பாலமும் 100 மீட்டர் நீளமுள்ள மண்கூரை மற்றும் தடுப்புச்சுவரும் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற விவரங்கள் தற்போது என்னிடத்திலே இல்லை.

குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.

*வினா எண் 80—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் 1–1–1980 முதல் 1–1–1981 வரை தீண்டாமை விலக்குச் சட்டத்தின்கீழ் எவ்வளவு பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) எவ்வளவு பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) தமிழகத்தில் 1–1–1980 முதல் 1–1–1981 வரை குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 759.